
அறிமுக நூல் – 10

# குறிஞ்சிப்பாட்டு



இரா. இளங்குமரனார்

அறிமுக நூல் வரிசை - 10

# குறிஞ்சிப்பாட்டு

இரா. இளங்குமரன்

# அறிமுகத்திற்கு அறிமுகம்

தொடக்க நாளிலேயே 'செந்தமிழ்' எனப்பட்ட நம்மொழி, இப்பொழுது 'செம்மொழி' என்னும் சிறப்பை நடுவண் அரசால் அடைந்திருக்கிறது. அத்தகுதிக்குக் காரணமாக இருந்த நூல்களை எல்லாம் இளம்பருவ மாணவர்களும், ஓரளவே தமிழ்ப் பயிற்சியுடைய பெரியவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் 'அறிமுகநூல்கள்' வெளியிட வேண்டும் என்று அவாவினார், அன்புத் தோன்றல், செயல்வீறுமிக்க தன்மானத் தமிழர், புரட்சிக் கவிஞர் மன்ற நிறுவனர் தமிழ்த்திரு **பி.வரதராசனார்**. அவர் விருப்பை நிறைவேற்றும் வகையிலும், என் எண்ணப்பதிவும் அதில் ஒன்றியதாலும், தொடர்ந்து செம்மொழிக்கு உரியவும் பிறவகையால் தமிழ்வளமாவதுமாம் கலை வள நூல்களையும் அறிமுக நூல்களாக வெளியிட இசைந்தேன்.

அவ்வரிசையில் தொல்காப்பியம், திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பொருநர்ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு எனத் தொடர்கின்றன.

முன்னைத் தொல்காப்பிய, திருக்குறள் அறிமுக நூல்கள் பெற்ற வரவேற்பும், அவ்வெளியீட்டில் கண்ட விற்பனைப் பெருக்கமும், பருகுவார் போல் கேட்ட அவையச் சிறப்பும், பரப்புதல் உந்துதல் அவர்களுக்கு உண்டாகிய தமிழ்ப்பயனும், நூலாசிரியனுக்கும், வெளியீட்டினர்க்கும் பேருவகை ஆவதாம்! 'தமிழ்மொழி' 'இனமீட்பர் பெருகுவர்' என்னும் நம்பிக்கையைப் பெருக்குதல் நற்பேறாம். ஆதலால், இத்தொடர் தொய்வின்றித் தொடர்வதுடன், பெருக்கத் தொடராகச் சிறக்கத் தூண்டும் என்பதும் உறுதியாம்.

பரப்பாளர் என்பார், புரப்பாளருமாம் சிறப்பு வெளிப்பாடு இஃதாம்.

வாழிய நலனே!

வாழிய நிலனே!

16-11-2014


இன்ப அன்புடன்,

**இரா.இளங்குமரன்**

திருவள்ளுவர் தவச்சாலை,

அல்லூர், திருச்சி-620 101

வெளியிட்டு மகிழும்




**புரட்சிக் கவிஞர்**
**மன்றம்**

75, வடக்குமாசி வீதி, மதுரை-1
அலைப்பேசி : 94437 10219

## அச்சிட்டு மகிழும்






# மணியம்மை

## மழலையர் தொடக்கப்பள்ளி

வடக்குமாசி வீதி, மதுரை-1

தொலைப்பேசி : 0452 2626111

# குறிஞ்சிப்பாட்டு

**★ குறிஞ்சிப்பாட்டு – குறிப்பு வரைக.**

குறிஞ்சி என்னும் அகத்திணை பற்றிப் பாடிய பாடல் குறிஞ்சிப்பாட்டு எனப்பட்டது. இது பத்துப்பாட்டு வரிசையில் எட்டாவது பாட்டாகும். இதனைப் பாடியவர் கபிலர் என்னும் சங்கச் சான்றோர் ஆவர். இப்பாடல் அகவலால் அமைந்தது; இருநூற்று அறுபத்தோர் அடிகளையுடையது.

**★ இப்பாடல் பாட்டுடைத் தலைவன் யார்?**

இப்பாடல் அகப் பொருளே பொருளாகப் பாடப்பட்டதால், பாட்டுடைத் தலைவன் இல்லாமல் அகப்பொருள் தலைவனாகச் சுட்டப்படும் கிளவித் தலைவனையே தலைவனாகக் கொண்டு எழுந்ததாகும். கிளவித் தலைவன் என்பான் பெயர் சுட்டப் படாதவன்; தலைவியும் அவ்வாறே ஆவர். பிறரும் தாய் செவிலி தோழி முதலாகச் சுட்டப்படுதல் அல்லாமல், பெயர் சுட்டப்படாராம்.

**★ குறிஞ்சி அகப்பொருள் பற்றி விளக்கம் வரைக.**

குறிஞ்சி என்பது அகத்திணை ஒழுக்கத்தில் முற்பட்டு நிற்பதாம். மலையும் மலைச்சார்ந்த இடமும், கூதிர் யாமப் பொழுதும் முதற்பொருளாகக் கொண்டு அமைவது.

அதன் கருப்பொருள், தெய்வம் உணவு முதலியவை பற்றியவையாம். குறிஞ்சித் தெய்வம் மலைகிழ வோன் எனப்படும் சேயோனாம். உணவு தினை தேன் முதலியவையாம். அதன் பண்ணும் யாழும் பறையும் குறிஞ்சிப்பண், குறிஞ்சியாழ், குறிஞ்சிப்பறை என்பனவுமாம். குறிஞ்சியின் உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் சூழ்நிலைகளுமாம்.

**★ இதனைப் பாடிய புலவர் யார்? சிறுவிளக்கம் தருக.**

இதனைப் பாடியவர் குறிஞ்சி பாடுதற்கே பிறந்த பிறவியென நிலைநாட்டிய குறிஞ்சிக் கபிலராம்; பறம்பு மலைக் கோமான் பாரியின் பேரன்பில் ஈடுபட்டு வாழ்ந்து, அவன் வாழ்ந்த காலத்தில் உடனாகி இருந்தும், அவன் பெரும் பெயர் நிலை உற்ற காலத்தில் அவன் மகளிர்க்குச் செய்யும் கடன்களையும் மேம்படச் செய்து, அவனைப் பிரிந்து வாழ இயலாராய் அவனொடும் சேரக், கனல்புகுந்து கல்லாகிய பெரியருமாம். 'கபில பரணர்' எனச் சான்றோரால் புகழப்பட்ட இரட்டையருள் ஒருவர் அவர். மதுரை சார்ந்த திருவாதவூர், அவர் பிறந்தவூர் என்று பின்னூல்களில் சுட்டப்படுகின்றது.

**★ கபிலர் பாடிய பாடல்களாக அறியப்படுவன எவை?**

சங்கச் சான்றோர் தமிழ்க் கொடையுள் முற்பட்டு நிற்பவர் கபிலரே ஆவர். அவர் பாடியனவாக அறியப்படுவன வருமாறு: பத்துப் பாட்டுள் குறிஞ்சிப்பாட்டு அவர் பாடியது. நற்றிணை(20), குறுந்தொகை(29), ஐங்குறுநூறு(100), பதிற்றுப்பத்து(10), கலித்தொகை(29), அகநானூறு(17), புறநானூறு(30) என்பவற்றுள் அவர் பாடியனவாக 235 பாடல்கள் கிடைத்துள. தொகை நூல்களுள் பரிபாடல் ஒன்று நீங்கிய ஏழிலும் அவர் பாடல்கள் இடம் பெற்றுள. தனிப்பாடல்கள் சிலவும் அவர் பெயரால் உண்டு. இன்னா நாற்பதும் பிறவும் பாடியவர் பிறிதொரு கபிலர் ஆகலாம்.

**★ கபிலர் குறிஞ்சிப் பாட்டைப் பாடக் காரணமாக இருந்தவன் யாவன்? அவனுக்காக இப்பாட்டை ஏன் பாடினார்.**

கபிலர் ஆரிய அரசன் பிரகத்தன் என்பானுக்குப் பாடியது இப்பாட்டு. ஆதலால், அவனுக்காகப் பாடினார் என்பதை அறியலாம். அவன் தமிழ் நாட்டவர் வாழ்வியலை அறிவதற்கு விரும்பினான். அதனால், தமிழர் வாழ்வியலாம் அகவாழ்வில் மேம்பட்ட காதற் கற்பு நெறியைப் பாடுதல் வழியாகத் தமிழ் அறிவித்தலே செவ்விய முறை எனத் தேர்ந்து தெளிந்து பாடினார்.

**★ ஏன் காதற் கற்பை விளக்கும் பாடலைப் பாடினார்?**

அவன் தமிழ் அறிய விரும்பினான் ஆதலாலும், தமிழ் என்பது தமிழ்மொழி என்னும் அளவில் நில்லாமல் தமிழர் வாழ்வியலையும் சுட்டும் என்பதை உணர்த்தவும், அவ்வாழ்வியலுள் நனி சிறந்ததாகவும், கற்பு வழி மணமே மணம் என்பதைக் கொண்ட ஆரிய வழியினனாக அவன் இருந்ததாலும், அந்நெறியினும் உயர் நெறி காதல் வழியாக ஏற்படும் கற்பு நெறியே 'இயற்கை வாழ்வியல் நெறி' என்பதை முழுதுற விளக்க வல்லது ஆதலாலும், அவனுக்கு அதன் சிறப்பைக் காட்டுதலே தமிழறிவுறுத்தலாக அமையும் எனக் கொண்டு பாடினார்.

**★ குறிஞ்சித் திணையுள் இப்பாடல் எத்துறை சார்ந்தது? விளக்குக.**

குறிஞ்சித் திணையுள் இப்பாடல், 'தோழி செவிலிக்கு அறத் தொடு நிற்றல்' என்னும் துறை சார்ந்ததாம். தலைவி கொண்ட மனமாசில்லாக் காதலை அறிந்த தோழி, அக்காதலற மாண்பைத் தன் தாயாகிய செவிலித் தாய்க்கு உரைப்பதாக அமைந்ததாகும். பின்னர்ச் செவிலித் தாய், தலைவியைப் பெற்றவளாம் நற்றாய்க்கு உரைக்க, அவள் அதனைத் தன்னையர்க்கு உரைத்துக் கற்பறத்தில் நிலைப்படுத்துவதாக அமைவதாம்.

**★ தோழி எப்படி அறத்தொடு நிற்கிறாள்?**

அன்னையே நீ நெடிது வாழ்வாயாக! யான் கூறப்போகும் செய்தியைக் கேட்டு நலம் செய்வாயாக!

என் தோழியாம் தலைவி தன்னால் தாங்கிக் கொள்ள முடியாத ஒரு பெருந்துயரை அடக்கி வைத்துக் கொண்டுள்ளாள். அத்துயரால் மெலிவடைந்து அணிந்த அணிகலன்கள் அமையும் நிலையில் இல்லாமல் கழல்வதாயின. அவள் கொண்டுள்ள நோய்க்கு அந்நோயை எதனால் அடைந்தாளோ அம்மருந்து அன்றி வேறு மருந்து இல்லை. அதனை வெளிப்படுத்தும் துணிவு அவளுக்கு இல்லாமையால் யான் என்னுள் மறைத்தும் முடியாமல் உரைக்க லானேன் எனத் தொடங்கினாள்.

★ **தோழி தாய்க்கு உரைத்ததென்ன?**

தலைவியின் இயற்கையான அழகு குறைந்தது; அவள் தோள்கள் மெலிவுற்றன; வளையல்கள் கழன்றன; அவள் அந்நிலையை அடைதலைக் கண்டும் அந்நிலை அவள் அடைய என்ன காரணம் என்பதை நீ அறிந்து கொள்ளவில்லை. நீ உண்மைக் காரணம் அறியாமல் பூக்கட்டிப்போட்டுப் பார்த்தாய்; கழங்குக் காயை எண்ணி அறியப் பார்த்தாய்: குறி சொல்பவரை நெருங்கி அவரிடம் காரணம் வினாவினாய்; உண்மை அறியாத பிறரும் இது தெய்வக் குறையால் நேர்ந்ததாகச் சொல்ல பல தெய்வங்களுக்கும் படையலிட்டு வழிபட்டாய். அதனால் அந்நோய் தணியாமையால் தலைவி நிலை கண்டு மேலும் வருத்தமே கொண்டாய்" என்றாள்.

★ **இருவர் வருத்தமும் அறிந்த தோழி என்ன செய்ததாகக் கூறினாள்?**

உங்கள் வருத்தத்தை அறிந்த யான் தலைவியினிடம் உண்மையைக் கூறுமாறு வேண்டினேன். அவள், "முத்து மணி பொன் முதலியவற்றால் செய்த அணிகலம் தொலைந்து போனாலும் மீளவும் அடைதற்கு இயலும், ஆனால் அவ்வணிகலங்களினும் மேம்பட்டதாம் ஒழுக்கம் கெட்டால் அக்கேட்டை விலக்கி மீட்டும் பெற்றுப் புகழ் பெறல் எத்தகைய அறிவர்க்கும் துறவர்க்கும் எனினும் முடியாதது ஆகிவிடும் என நூலறிவு மிக்கோர் தெளிவாகக் கூறுவர். ஆதலால் யானும் என்னை விரும்பும் தலைவனும் ஒருமனப்பட்டு ஈருடல் ஓருயிர் ஆயினோம் என்பதைத் தாய்க்குத் தெரிவித்தால் நமக்குக் குறைவு வாராது; நெஞ்சார ஏற்றுக் கொள்வர்" என்றாள்!

★ **தலைவி கூறியதைக் கேட்ட தோழி உறுதியின்றி நோக்கத் தலைவி என்ன கூறினாள்?**

"நம் நெஞ்சக் கலப்பை எடுத்துக் கூற அவர்கள் நம் தலைவர்க்குத் தர இசையார் எனின் அதனாலும் ஒன்றுமில்லை. வாழும் நாளெல்லாம் நாம் பொறுத்திருந்து இறப்போமாயின்

இப்பிறப்பு ஒழிந்து மறு பிறப்பிலாயினும் நம் தலைவனை அடையும் பேற்றைப் பெறுவோம் என்று உறுதியாகக் கூறினாள்" என்றாள்.

**★ தோழி தாயினிடம் தன் நிலையாகக் கூறியதென்ன?**

"மான் போன்ற பார்வையுடைய தலைவி மயங்கியவளாய் இருப்பதையும், அவள் நிலையை நோக்கி நீயும் அவலப்படுவதையும் எண்ணி யான் செயல் இழந்து தவிக்கிறேன்.

பகை கொண்டு நிற்கும் வேந்தர் இருவரை அமைதிப்படுத்திப் போர் ஒழியுமாறு செய்ய வல்ல சான்றோர் போல உங்கள் இருவர் துயரையும் அமைதிப்படுத்தி நலம் செய்ய ஆற்றாதவளாய் யானும் வருந்துகிறேன்" என்று கூறினாள்.

**★ தோழி தாயினிடம் மேலும் கூறியதென்ன?**

"அன்னையே, நம் முந்தையர் தேர்ந்து கூறிய முறைப்படி நம் குடிக்குத் தக்க குடிமைச் சிறப்பும் பண்புச் சிறப்பும் சுற்றத்தார் நலச் சிறப்பும் ஒத்திருக்கக் கண்டே இம்முடிவுக்கு நாங்கள் வந்தோம்" என்றாள்.

**★ காதல் நிகழ்ந்த வகையைத் தாய்க்குத் தோழி எவ்வாறு கூறுகிறாள்?**

அன்னையே இக்காதல் நிகழ்ந்த வகையைக் கூறுகிறேன். சினங் கொள்ளாமல் கேட்டருள்வாயாக என்று தொடங்கினாள்.

**★ தோழி கூறியதென்ன?**

"தினைக் கதிரைத் தின்னவரும் கிளிகளை ஓட்டி, பகற்பொழுது போகு முன்னர் நீங்கள் வீட்டுக்கு வருவீராக" என்று எங்களை நீ விடுத்தனை. நாங்களும் அவ்வாறே தினைப்புனம் சென்றோம்.

ஆங்கு மரத்தின்மேல் கட்டப்பட்ட பரணில் ஏறி, கவணும் தட்டைப் பறையும் குளிர் என்னும் பறையும் எடுத்து 'ஆ' 'ஓ' எனக் குரலெடுத்துக் கூறிக் கிளியை ஓட்டினோம். கதிர் மேலே ஏறுதலால் வெயிலும் மிகப் பறவைகள் தத்தம் கூட்டை அடைந்தன.

கடல்நீர் முகந்த கருமுகில் மின்னி இடித்து மலைமேல் மழை பொழிந்தது. அதனால் பெருகிய நீர் அருவியாகி வீழ்ந்தது. அவ்வருவியில் மிக விருப்புடை யோமாய் நீராடினோம்; சுனையில் சுழன்றும் ஆடினோம், பொன்னில் பதித்த மணி போன்ற கூந்தல் முதுகிலே படிய அதனைப் பற்றிப் பிழிந்து உலர்த்தினோம். நீரில் நீடிய பொழுது ஆடுதலால் கண் சிவப்புற்றது என்றாள்.

**★ தோழி அதன்மேல் நிகழ்ந்தனவாக என்ன கூறுகிறாள்?**

பின்னர்க் கண்கவரக் காட்சி வழங்கிய பூக்களைப் பறிக்கும் ஆவலொடு செங்காந்தள், ஆம்பல், அனிச்சம், குவளை, குறிஞ்சி, வெட்சி, சிவந்த கொடுவேரி, தேமா, மணிச்சிகை, மூங்கில்; எறுழ், மராமரம், கூவிரம், வடவனம், வாகை, குடசம், எருவை, செருவிளை, கருவிளை, பயினி; வானி, குரவம், வகுளம், காயா, ஆவிரை, வேரல், சூரல், பூளை, குன்றி, முருக்கிலை, மருது, கோங்கு, மஞ்சாடி, பாதிரி, செருந்தி, புனலி, கரந்தை, காட்டுமல்லிகை, மா, தில்லை; பாலை, முல்லை, கஞ்சா, பிடவம், செங்கருங்காலி, வாழை, வள்ளி, நெய்தல், தெங்கம் பாளை; செந்தாமரை, ஞாழல், மௌவல், கொகுடி, செம்மல்லிகை, சிறுசெங்குரலி, கோடல், தாழை, நறுவழை, காஞ்சி; மணிக்குவை நெய்தல், மராஅம், தணக்கு, ஈங்கை, இலவம், கொன்றை, அடும்பு, ஆத்தி, அவரை, பகன்றை; பலாசம், பிண்டி, வஞ்சி, பித்திகை, சிந்துவாரம், தும்பை, துளசி, தோன்றி, நந்தி, நறவம், புன்னாகம், பாரம், பீரம், குருக்கத்தி, ஆரம், அகில், நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி, குருந்தம்; வேங்கை பரேரம், புழகு முதலாய பூக்களைப் பறித்து மழையால் கழுவித் தூய்மை செய்யப்பட்ட பாறையில் குவித்தோம்; தழைகளைப் பறித்துத் தழையுடை பூண்டோம்; நறுமென் பூக்களைக் கூந்தலில் சூடினோம் என்று நிறுத்தினாள் தோழி.

**★ அவளை நோக்கிய தாய்க்கு மேலே நிகழ்ந்ததாக என்ன கூறுகிறாள்?**

நாங்கள் செந்தளிரமைந்ததும் பூம்பொடி உதிர்வதுமாம் செயலையின் நிழகலில் இருந்தோம். அப்பொழுதில் அங்கே ஓர் தோன்றல் எய்தினான். அவன் கரிந்து சுரிந்து நறுமணம் கமழும் குடுமியை உடையவன்; பல்வகை மலர்களைப் பாங்குறத் தொடுத்து அணிந்த மாலையினன்; சந்தனம் கமழும் மார்பில் அணிகள் பல பூண்டவன்; அவன் தலையில் சுற்றிய பித்திகை மாலையும் காதில் செருகிய செயலைத் தளிரும் தனி அழகாகப் பொலிந்தன. அவன் அழகுற உடுத்த உடைமேல் பொலிவான கச்சுக் கட்டியிருந்தான். கையில் வில்லும் கணையும் கொண்டிருந்தான். காலில் கழல் இலங்கியது; எதிரிட்ட வீரரை எல்லாம் வென்று எதிரிட வருவார் உளரா என்னும் வீறுடையான்; வெள்ளிய பற்களையுடைய அவன் நாய்கள் எங்களை வளையவர நாங்கள் நடுங்கினோம். அந்நிலையில் எங்களை அணுகி மெல்லியதும் இனியதும் கேட்கும் தோறும் விரும்பத் தக்கதுமாம் சொற்களைச் சொல்லி, தண்ணிய கண்களையுடைய இளையவர்களே அஞ்சாதீர் என்று தேற்றி, எம்மைத் தப்பி வந்ததோர் விலங்கு, இவணுற்றது நீவிர் கண்டிரோ? என்றான். யாங்கள் அதற்கு யாதொரு மறுமொழியும் சொல்லோமாய் நின்றோம். எங்களை விரும்பி நோக்கிக் கண்டதைக் கூறிர் எனினும் எம் வினவலுக்கு மறுமொழி கூறலும் பழியாமோ என்று வினவினான். சூழ்வந்து குரைத்த நாய்களை அடக்கி எங்கள் சொல்லை எதிர்பார்த்து எங்களை நோக்கி நின்றான், என்றாள்.

**★ மேலும் நிகழ்ந்தது கூறலை எதிர்பார்த்த தாய்க்கு என்ன கூறினாள் தோழி?**

கூரைக் குடிசையில் வாழ்ந்த குன்றவன் தன் மனைவி வடித்துத் தந்த கள்ளை அருந்தி மயங்கிப் போய்த் தினைக் காவலைச் செய்யா தொழிந்தான். அதனால் புனத்துள் புகுந்த யானை தினையைத் தின்றும் மிதித்தும் அழிவு செய்தது;

அழிவுக்கு வருந்திய அவன் தன் வில்லை வளைத்து அம்பை ஏவி யானையை வெருட்டலானான்; தட்டைப்பறை அறைந்தான்; சீழ்க்கை ஒலித்தான்; சினம் கொண்ட யானை மரங்களை முரித்தது; இடியென முழக்கமிட்டது; கொல்ல வரும் கூற்றே போல எங்களை நோக்கி வந்தது. நாங்கள் நடுக்கமுற்று உயிர் தப்புவதற்கு எண்ணி, இயல்பான நாணத்தை விடுத்து அத் தோன்றலை அணுகி நின்றோம். அவன் எங்கள் நடுக்கம் போம் வகையில் அம்பை ஏவி அவ் யானையின் மத்தகத்தைத் தாக்கினான்; குருதி பெருக்கெடுக்க அவ்விடத்தை விட்டுத் தப்புதற்கு யானை ஓடிற்று" என்றாள்.

### ★ மேலும் தாயினிடம் தோழி என்ன கூறினாள்?

"எங்கள் நடுக்கமும் அச்சமும் தீரவே ஆங்கிருந்த கடம்பமரத்தின் அடியைச் சுற்றி யாங்கள் கைகோத்து ஆடினோம். ஆற்று நீரில் வீழ்ந்து விளையாடினோம். அப்பொழுது பெருகிய வெள்ளம் எங்களை ஈர்த்துச் சென்றது. அதனைக் கண்ட அத்தோன்றல் விரைந்து வந்து எங்களை எடுத்துக் காத்தான். தலைவியை நோக்கி நின் எழில்மிக்க நலத்தை நுகர்வேன்; இனி என்றும் உன்னை விட்டு நீங்கேன்; அஞ்சாதே என்று சொல்லி அவள் நெற்றியை வருடினான்; என்னை நோக்கி நகைத்து என் உதவியை நாடுவான் போல் நின்றான். தலைவிக்கு இயல்பான நாணமும் அச்சமும் மேலிட அவன் நெருக்கத்தில் இருந்து விலக முயன்றாள். விலக விடாதவனாய்த் தன் மார்புறத் தழுவினான்" என்றாள்.

### ★ தலைவன் நிலையாகத் தோழி என்ன கூறினாள்?

குறிஞ்சி நிலத் தலைவனாம் அவன் பாறைகளில் மிளகுப்பழம் கிடக்கும். மாம்பழமும் பலாப்பழமும் கனிந்து வீழ்ந்து கிடக்கும். இவற்றின் தெளிவை உண்ட மயில்கள் மதுவுண்டார் போன்ற மயக்கத்தில் ஆடித் திளைக்கும்; விழாக்களின் போது கழையில் கட்டிய கயிற்றில் ஏறி ஆடும் மகளிர் போன்றதாகத் தோன்றும். இத்தகைய வளமார்ந்த மலைநிலத் தலைவன் தலைவியை மணந்து கொண்டு இல்லறம் நடாத்தப் பெரிதும் விரும்புகின்றான்.

வருவார் அனைவரும் உண்ணுதற்குத்தக எப்பொழுதும் திறந்த வாயிலாய் இருக்கும் அகன்ற மனைக் கண் சுற்றமும் பிறரும் உண்டு எஞ்சிய உணவை நீ படைக்க யானுண்ணல் பெரும் பேறாம் என்று தலைவியிடம் கூறினான் தலைவன் என்றாள் தோழி.

★ **தலைவன் செய்த சூழாகவும் பிறவாகவும் தோழி சொல்வதென்ன?**

மலைநிலக்கிழவனாம் முருகனை வணங்கி, இனிய அருவி நீரைப் பருகி உன்னைப் பிரியேன்; மணங்கொண்டு அறவாழ்வு நடத்துவேன் எனச் சூள் மொழிந்தான். களிற்றால் கூடிய கூட்டத்தை விட்டுப் பிரியானாய் அற்றைப் பகலெல்லாம் அங்கே தங்கினான். மாலை ஞாயிறு தன் கதிர் சுருக்கி மேற்கு மலையில் ஏறி மறைந்தது. மாலையை அறிந்த மான்கள் உறைவிடம் உற்றன. கன்றை நினைத்துக் காலிகள் சென்றன. அன்றில் பறவை தன் பெட்டையை அழைத்தது; பாம்பும் இரை தேடியது; ஆயர்கள் தம் ஆம்பலங் குழலை எடுத்து இசைத்தனர். அந்தணர் அந்திப்பொழுதுக் கடமைகளைச் செய்தனர். வளமனைகளில் மகளிர் குடும்ப வழிபாடாம் இல்லுறை தெய்வ வழிபாட்டைச் செய்யும் வகையில் விளக்கேற்றினர். காட்டில் வாழ்வார் பரணிலிருந்து தீக்கடை கோலால் நெருப்பை உண்டாக்கி ஒளி பெற்றனர். காட்டு விலங்குகள் குரலெழுப்பிக் கூடிச் சேர்ந்தன. இவ்வகையாக மாலைப் பொழுது எய்தியது," என்றாள்.

★ **தலைவன் கூறிய உறுதிமொழியாகத் தோழி கூறியதென்ன?**

"ஒளிமிக்க அணிகளை அணிந்தவளே, உன் பெற்றோர் உற்றார் உறவினர் உன்கையைப் பற்றி என் கையில் ஒப்படைக்கும் திருமணம் பின்னே நிகழும். அஃது ஊரவர் அறிய நடைபெறுவதாகும். அதுவரை நம் மனம் ஒருமித்த காதல் தொடர்வது பற்றிக் கவலைப்படாதே," என்று தலைவி நெஞ்சம்

நிறைவுறும் சொற்களைத் தலைவன் உறுதியாகச் சொன்னான். அவ்வளவில் நில்லானாய்ப் பசுவைத் தொடுத்து வரும் கன்று போல உடன் வந்து நம்மூர் முகப்பிலுள்ள நீர்த்துறையில் விடுத்துப் பிரியமாட்டாமல் பிரிந்து சென்றான்" என்றாள்.

### ★ பின்னும் நிகழ்ந்தனவாகத் தோழி கூறியதென்ன?

முதல்நாள் தோன்றிய காதலொடு தொடர்ந்து இரவுப் பொழுது இவண் வந்தான். அவ்வாறு வரும்போது அவனுக்கு உண்டாகும் இடையூறுகள் பல. காவலர் கருத்தோடு கண்காணிப்பர்; இரவு வரும் புதியனைக் கண்டு நாய்கள் குரைக்கும்; நீ உறக்கம் நீங்கி விழிப்போடு இருப்பாய்; நிலவு பளிச்சிட்டுப் பலரும் அறியச் செய்துவிடும்; எனினும் அவற்றைக் கருதாமல் தலைவன் வருவான். தலைவியைக் காண முடியா நிலையில் திரும்பினாலும் வருதலைத் தவிர்ந்தான் அல்லன். குறிப்பிட்ட இடம் அடையாளம் ஆகியவை தவறிக் காணாமல் சென்றாலும் வருதலைத் தவிர்ந்தான் அல்லன் என்றாள்.

### ★ தலைவன் தகுதிகளாகத் தோழி கூறியதென்ன?

தலைவன் தகவமைந்த அகவையன்; நற்குணங்கள் எதுவும் குறையாதவன்; குடிப்பெருமை போற்றுபவன்; சொல்மாறாதவன்; இவ்வாறு தொடர்ந்து களவொழுக்கம் கொள்ளல் பெருமையாகாது; விரைந்து வரைந்து கொண்டு இல்லறம் நடத்துதலே இருபாலும் நலம் என்று தலைவி கூறுவதை ஒப்புக் கொண்டுள்ளான். அவன் இரவில் வரும் வழியின் இருள், விலங்கு, பாம்பு முதலை முதலியன திரிதல் இவற்றை எண்ணி வலையகப்பட்ட மயிலெனத் தலைவி வருந்திக் கலக்கம் கொண்டுள்ளாள். அவள் கொண்டுள்ள மாசில்லா மனத்துக் களவு நிலை இதுவே என்று தோழி தாய்க்கு அறத்தொடு நின்றாள்" எனக் குறிஞ்சிக் கபிலர் தம்பாடலை நிறைவு செய்கிறார்.

**★ திருமணம் முடிந்த வகையைக் கூறாமல் முடித்ததேன்?**

தமிழர் அறம் களவுக் காதல், கற்பறம் ஆகாமல் போகாது என்பது தெளிவான உண்மை ஆகலின் திருமணம் முடித்து இல்லறம் நடத்தினார் என்பதே முடிபொருளாம்.

**★ கபிலர் பல்வகை மலர்களைப் பறித்தனர் என்று கூறி அமையாமல் ஒன்று குறை நூறு பூக்களின் பெயர்களை அடுக்கிக் கூறுவானேன்?**

அவ்வாறு அவர் அடுக்கிக் கூறுதல் தம் பெரும் புலமை காட்டுதற்காக அன்று. தமிழர் இயற்கையொடும் இரண்டறக் கலந்து வாழ்ந்து ஒவ்வொரு மரம் செடி கொடிக்கும் பெயரீடு செய்த சிறப்பை ஆரிய அரசன் பிரகத்தன் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்கேயாம். நாமே நம் இயற்கைச் செல்வங்களையும் அவற்றின் பெயர்களையும் பயன்பாட்டையும எப்படி இழந்துள்ளோம் எனபது நம் மனத்தைக் குடையவில்லையா?

**★ திருவள்ளுவர் கூறும் அறத்தின் இலக்கணத்திற்கும் இவ்வறத்தொடு நிற்றலுக்கும் தொடர்பு உண்டா?**

தொடர்பு உண்டு. மிகவே உண்டு; திருவள்ளுவர் கூறும் இலக்கணம் தொல்காப்பியர் கூறும் அறத்தொடு நிற்றல் என்னும் இலக்கண வழி வந்ததேயாம்.

மனத்துக்கண் மாசில்லாமையே காதல் தொடக்க இலக்கணமாம்,

மனமாசமைந்த காதல் கேடு உயிரையே காவு வாங்குவது கண்கூடு, இதனைப் பொதுமக்களும் உணர்ந்ததால் தான், "கரணம் தப்பினால் மரணம்" என்றனர்.

கரணமாவது திருமணம். காதலித்த ஒருவனோ ஒருத்தியோ தங்கள் காதல் உறுதிப்பாட்டில் தவறினால் இறப்பே நேர்தல் காணலாம். வாழ்ந்தாலும் இறந்தாலொத்த வாழ்வாகவே இருக்கும். ஆதலால் காதல், காதல் வாழ்வுக்கும், கற்பு வாழ்வுக்கும், உலகியல் பொது வாழ்வுக்கும் மனத்தில் மாசில்லா அறம் போற்றப்படுதல் வேண்டும் என்பதற்கே, அறத்துப்பால் முதற்றொடக்கம் அறன் வலியுறுத்தல் வைத்து,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்றார்.

மற்றவையெல்லாம் ஆக்கக்கேடாம் என்பதற்கே

"பிற ஆகுல நீர"

என்றார். ஆகு + உலம் = ஆகுலம் = ஆக்கக்கேடு.


சங்க அகப்பாடல் முழுமையும் இவ்வறம் போற்றியே படைக்கப்பட்டன என்க.

நன்கொடை : ரூ.15/-

ஆக்கம் : பெரியார்

அறிமுக நூல் – 10

# குறிஞ்சிப்பாட்டு



இரா. இளங்குமரனார்

ஆக்கம் பெரியார்